# தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்

பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.

தலைமை இடம் - சென்னை.


| S.நாகராஜன் | K.சந்திரசேகரன்,B.A., | B.தியாகராஜன்,M.Com., |
|---|---|---|
| தலைவர் | பொதுச்செயலாளர் | நிதிச்செயலாளர் |


**<u>சுற்றறிக்கை எண்: 01</u>** நாள்:09-01-2020

அன்புள்ள சங்க உடன்பிறப்புகளுக்கு வணக்கம். 24-12-2019 தேதியிட்ட சுற்றறிக்கை எண்:13/2019 வாயிலாக அறிவித்திருந்தபடி மத்திய தொழிற்சங்க மையங்களுடன் இணைந்துள்ள மின்சாரத்தொழிலாளர் சம்மேளனம், மத்திய அமைப்பு, தொழிலாளர் முன்னேற்றசங்கம், ஐ.என்.டி.யு.சி.சங்கங்கள், தொழிலாளர் பொறியாளர் ஐக்கியசங்கம் மற்றும் ஜனதா தொழிலாளர்சங்கம், எம்ளாயீஸ் பெடரேசன் ஆகியவற்றுடன் இணைந்து 10-12-2019 அன்று நடைபெற்ற சங்கத்தின் உயர்மட்டக்குழுவில் எடுத்திட்ட முடிவுகளின்படி 08-01-2020 அன்று நடைபெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் நமது சங்கமும் கலந்து கொண்டது.

நடைபெற்ற போராட்டத்தில் ஏறத்தாழ 35,000 மின்வாரிய ஊழியர்களும் அலுவலர்களும் கலந்து கொண்டதாக அறியவருகிறோம். போராட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து உடன்பிறப்புகளுக்கும் தோழமைச்சங்கப் பொறுப்பாளர்களோடு இணைந்து வேலை நிறுத்தப் போராட்டம் வெற்றி பெற ஓய்வின்றி உழைத்திட்ட அனைத்து பொறுப்பாளர்களுக்கும் நன்றியினையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

07-01-2020 அன்று தலைமைப்பொறியாளர்(பணிஅமைப்பு) அவர்களை சந்தித்து புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து விட்டு உள்ளாட்சி தேர்தல் நடத்தைவிதிகள் முடிவுக்கு வந்துவிட்டதால் கணக்கு மேற்பார்வையாளர், உதவி கணக்கு அலுவலர், துணைநிதிக்கட்டுப்பாட்டு அலுவலர், நிர்வாக உதவியாளர், உதவி நிர்வாக அலுவலர், மதிப்பீட்டாய்வாளர், மதிப்பீட்டு அலுவலர், முதுநிலை மதிப்பீட்டு அலுவலர், இளநிலைப்பொறியாளர் முதல்நிலை ஆகிய பொறுப்புகட்கு பதவி உயர்வு பட்டியல்களை அனுமதித்து பதவி உயர்வு உத்திரவுகளை விரைவில் வழங்கிட வற்புறுத்தியுள்ளோம்.

அதே போல் வருவாய் மேற்பார்வையாளர், கணக்கு அலுவலர் ஆகிய பொறுப்புகட்கு பதவி உயர்வு வழங்கிட தகுதி காண் அறிக்கை கேட்டிடவும், உள்முகத் தேர்வு மூலம் தொழில் நுட்ப உதவியாளர், இளமின்பொறியாளர் IIம் நிலை பொறுப்புகளை நிரப்பிடவும் வற்புறுத்தியுள்ளோம்.

இந்த திங்களில் விருப்பமாறுதல் கோரியுள்ளவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னர்தான் பதவி உயர்வு, வட்ட ஒதுக்கீடுகள் மற்றும் நிலுவையில் உள்ள ரீபேக் மாறுதல்கள் வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது.

கணக்கு உதவியாளர் பொறுப்பிற்கு பதவிஉயர்வு வழங்கிட உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தடைஉத்திரவினை நீக்கிட தேவையான நடவடிக்கைகளை எடுத்திட நிர்வாகத்தை வற்புறுத்தியுள்ளோம்.

கேங்மேன் நியமனம் மற்றும் அட்டைப்பட்டியல் பணித்தொகுப்பில் மதிப்பீட்டாளர்களின் கல்வி தகுதி மாற்றம் ஆகியவை தொடர்பான வழக்குகள் பொங்கல் விடுமுறைக்குப் பின்னர் தான் விசாரணைக்கு வரும் என அறிய வருகிறோம்.

…2…

08-12-2019 அன்று நடைபெற்ற சங்கத்தின் உயர்மட்டக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள் படி 2020ம் ஆண்டிற்கான சந்தாவாக ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் ரூ.200ம் கூடுதலாக சிறப்புக்கட்டணம் (levy) ரூ.100ம் ஆக மொத்தம் ரூ.300ஐ வசூலித்திடவும், சந்தா பங்குத்தொகையுடன் கூடுதல் கட்டணம் ரூ.100ஐயும் மத்திய சங்கத்திற்கு செலுத்திடவும் பொறுப்பாளர்களை வேண்டுகின்றோம்.

15-09-2019 அன்று சென்னையில் நடைபெற்ற மாநிலச் செயற்குழு தீர்மான எண்:9 வாயிலாக முடிவெடுத்தபடி கிளைத்தேர்தல்களை 28-02-2020ம் நாளுக்குள் நடத்தி முடித்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிட பொறுப்பாளர்களை வேண்டுகின்றோம்.

08-08-2019 நாளைய வேலை நிறுத்தப் போராட்ட கோரிக்கைகள் மீது நடைபெற்றுவரும் சமரச பேச்சுவார்த்தைகள் மற்றும் 08-01-2020 தேதிய வேலை நிறுத்தப் போராட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வுகள் செய்திடவும் 2020ம் ஆண்டிற்கான இயக்க நடவடிக்கைகள் குறித்து திட்டமிடவும் பிப்ரவரி திங்கள் இறுதியில் உயர்மட்டக் குழுவைக் கூட்டிட உள்ளோம்.

காலிபொறுப்புகளை நிரப்பிட வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் தொடர்ந்து வலியுறுத்தியதின் காரணமாக அட்டைப்பட்டியல் பணித்தொகுப்பில் 1300 மதிப்பீட்டாளர்கள் பொறுப்புகளையும், கணக்குப்பிரிவில் 500 இளநிலை உதவியாளர் பொறுப்புகளையும், தொழில் நுட்பபிரிவில் 400 உதவிப்பொறியாளர் (மின்னியல்) 125 உதவிப்பொறியாளர்(மெக்கானிக்கல்) 75 உதவிப்பொறியாளர்(சிவில்) பொறுப்புகளையும் நேர்முகத்தேர்வு மூலம் நிரப்பிட விண்ணப்பங்களை கோரி வாரிய நிர்வாகம் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது என்பதை தகவலுக்காகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மதிப்பீட்டாளர் பொறுப்பிற்கு 10-02-2020ம் நாளுக்குள்ளும், உதவிப்பொறியாளர் பொறுப்புகளுக்கு 24-02-2020ம் நாளுக்குள்ளும், கணக்கு இளநிலை உதவியாளர் பொறுப்பிற்கு 09-03-2020ம் நாளுக்குள்ளும் இணையவழி மூலம் (Online) விண்ணப்பங்கள் சமர்ப்பித்திட வேண்டும்.

**உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்.**

தோழமையுள்ள,

பொதுச்செயலாளர்.

பெறுநர்: மத்திய அலுவலக கிளைச்செயலாளர்கள். உதவிகோட்டச் செயலாளர்கள், கோட்டச் செயலாளர்கள், வட்ட மகளிரணிச்செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், வட்டத் தலைவர்கள், மண்டலச் செயலாளர்கள், மற்றும் மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.